## அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணி
### அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்



**அரியலூர்,ஜூலை.10-**
அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயத்தில் சுற்றுலாத் துறையின் சார்பில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி கலெக்டர் பொ.இரத்தினசாமி, , அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் 2024-25 ஆம் ஆண்டு வரவு செலவு கூட்டத் தொடரில் அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதிகளில் ரூ.1.38 மதிப்பீட்டில் கழிவறைகள், பேவர் பிளாக் சாலை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம், தேவாலயப் பகுதி நுழைவு வாயில், R.O.Plant, குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகள், தெரு விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப் பகுதியில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்றையதினம் துவக்கி வைத்தார்.

அ த னைத் தொ டர்ந்து போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்கள் இன்றையதினம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் ஆனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் பேருந்துகள் அனைத்து இடங்களிலும் வழக்கம்போல் இயக்கப்பட்டு பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி பயணம் மேற்கொண்டு வருகின்றனர் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவி சுற்றுலா அலுவலர் வரதராஜன், ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலய பாதிரியார் தங்கசாமி மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டத்தில் குரூப்-4 எழுத்துத்தேர்வு நடைபெற உள்ளது
### கலெக்டர் வே.சரவணன் தகவல்

**திருச்சி,ஜூலை.10-**
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் 197 தேர்வு மையங்களில் 55,456 தேர்வர்கள் இத்தேர்வினை எழுத உள்ளனர். இத்தேர்வு பணிகளுக்கென 197 தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்போட்டித் தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள் உள்ளிட்ட தேர்வு பொருட்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள 66 இயங்கு குழுக்கள் (ஆழடிடைந ருnவை) அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் துணை வட்டாட்சியர் நிலையில் ஒரு அலுவலர், துப்பாக்கி ஏந்திய காவலர் ஒருவர் ஆகியோர் இயங்குவர். தேர்வு மையங்களை திடீர் ஆய்வு செய்ய துணை ஆட்சியர் நிலையில் 11 பறக்கும் படை (குடலiபெ ளுஙரயனள) அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வு மையத்தினை கண்காணித்திட 197 ஆய்வு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து தேர்வு மையங்களுக்கும் காவல்துறை பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்கள் தேர்வு மையங்களுக்கு சென்று வர சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. தேர்வர்கள் செல்லிடைப்பேசி, புளூடுத், டிஜிட்டல் கடிகாரம் உள்ளிட்ட மின்னணு சாதன பொருட்களை தேர்வு மையங்களுக்கு எடுத்துவர அனுமதி இல்லை என்றும், காலை 09.00 மணிக்கு பின்னர் தேர்வு மையத்திற்கு வரும் தேர்வர்களை எந்த காரணத்தினை முன்னிட்டும் அனுமதிக்க முடியாது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி கலெக்டர் வே.சரவணன், தெரிவித்துள்ளார்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்
### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,ஜூலை.10-**
புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு புதிய திட்டப் பணிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (09.07.2025) அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் மீது அதிக அக்கறைகொண்டு எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பேரூராட்சிப் பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களின் தேவைகளறிந்து புதிய திட்டப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி, காந்திஜி சாலை அருகில், மூலதன மானியத் திட்டத்தின்கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள, மன்ற கூட்ட அரங்குடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுமானப் பணியினையும் மற்றும் மேற்பனைக்காடு சாலையில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினையும் இன்றையதினம் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டப் பணிகளை, தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் அ.சுந்தரராஜன், மேற்பார்வையாளர் சீனிவாசன் மற்றும் சண்முகநாதன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் பலர்; கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மருவத்தூர் கிராமத்தில் ஊர் சுத்தியான் கோவில் மகா கும்பாபிஷேகம்



**பெரம்பலூர்,ஜூலை.10-**
பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் மருவத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அய்யனார், ஸ்ரீ மோடையான் சாமி ஆலய வளாகத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஊர்சுத்தியான் சுவாமி, ஸ்ரீ பாலாயி அம்மன், ஸ்ரீ கருப்பண்ண சுவாமி, ஸ்ரீ நொண்டி கருப்பு சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்கு 8-7 - 25 அன்று காலை 10.45 மணி முதல் 11.45 மணிக்கு குடியளைத்து மாலை 4.45 மணிக்கு மேல் 5.45 மணிக்கு தீர்த்தக்குளம் ,தேவதைகள் பிரார்த்தனை ,ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, புண்ணியாகவாஜனம் வாஸ்து சாந்தி,காலகர்ஷணம், முதல் காலயாக பூஜை , பூர்ணாஹீதி மஹா தீபாரதணை பிரசாதம் வழங்கப்பட்டது .இரவு புதிய மூர்த்திகள் அஷ்டபந்தனம் சாற்றப்பட்டது . அதனை தொடர்ந்து 9 - 7- 25 அன்று காலை 6 .00 மணிக்கு இரண்டாம் கால பூஜை திவ்யா ஹீதி, மஹா பூர்ணாஹுதி, மகா தீபாரதணை தேவாரத்தினை நடைபெற்றது அதனை தொடர்ந்து காலை 10.00 மணிக்கு கடகம் புறப்பட்டு காலை 10 .15 மணிக்கு மேல் மஹா கும்பாபிஷேகம். மகா தீபாராதனை பிரசாதம் வழங்கப்பட்டது பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது நிகழ்ச்சி ஏற்பாடுகளை மருவத்தூர் ,பேரளி, சாத்தனூர், குடிமக்கள் மற்றும் கிராம பொது மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## மயிலாடுதுறை அருகே சாக்கியம்பள்ளி வீரபத்திர காளியம்மன் கோயில் பால்குடம்



**மயிலாடுதுறை,ஜூலை.10-**
மயிலாடுதுறை அருகே திரு இந்தளூர் ஊராட்சி சாக்கியம்பள்ளி புது தெரு மற்றும் அம்பேத்கர் தெருவில் எழுந்தருளியுள்ள வீரபத்ர காளியம்மன் ஆலய பால்குடம் மற்றும் கரக உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது இந்த பால்குட திருவிழா பல்லவராயன் பேட்டை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் இருந்து பால் காவடி அழகு குத்திக்கொண்டு நேர்த்திக் கடனை செலுத்த பாதயாத்திரை ஆக முக்கிய கிராம ஊர்களுக்கு சென்று அங்கு உள்ள கோயில்களில் சிறப்பு வழிபாடு செய்யப்பட்டு வழிநெடுக்கும் பக்தர்கள் வாழிப்பாடு செய்து வழிபட்டன இதனை தொடர்ந்து பால் காவடி எடுத்து வந்தவர்கள் கோயிலில் வளம் வந்து வீர பத்திரகாளி அம்மன் சிலைக்கு சுமந்து வந்த பாலை ஊற்றி அபிஷேகம் செய்தனர் பின்னர் கஞ்சிவாத்தல் நடைபெற்றது இதனை தொடர்ந்து மாலையில் திருஇந்தளூர் நாள்கால் மண்டபத்தில் இருந்து கரகம் அலங்காரம் செய்யப்பட்டு இரவு வீதி உலா வந்தது இந்நிகழ்ச்சியில் நாம் தமிழர் கட்சியின் மாவட்ட செயலர் தமிழன் காளிதாசன் ஊர் மக்கள் கிராம முக்கியஸ்தர்கள் நகர்மன்ற உறுப்பினர் ரஜினி உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்
### மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு



**பெரம்பலூர்,ஜூலை.10-**
பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் எம்.லக்ஷ்மி, , கலெக்டர் ச.அருண்ராஜ் முன்னிலையில் (09.07.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பெரம்பலூர் நகர் பகுதிகளில் சாலை போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் பொருட்டு, செஞ்சேரி முதல் எளம்பலூர் தேசிய நெடுஞ்சாலை 45 புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் அதிகளவில், கனரக வாகனங்களும், இதர வாகனங்களும் செல்வதால் இச்சாலையை மேம்படுத்தி 4 வழிச் சாலையாக அமைப்பது தொடர்பாக பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்து, திட்ட அறிக்கையினை விரைந்து தயார் செய்து வழங்கிட நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், கோனேரிபாளையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான வட்டார அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையம் அமைப்பது தொடர்பாக பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாற்றுத்திறனாளிகள் வந்து செல்லும் வகையில் சாலை மேம்பாட்டு பணிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு கழிவறை ஏற்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை இம்மையத்தில் ஏற்படுத்திட மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பெரம்பலூர் 3 ரோடு முதல் அரியலூர் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையின் அதிகளவு கனரக வாகனங்கள் சென்று வருவதால் சாலைகள் சம நிலையில் இல்லாமல் உள்ளதை தொடர்ந்து, இச்சாலையினை மேம்படுத்திட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.234.30 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்காக 26 தெரு சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதில் பூங்கா நகர் பகுதியில் சாலை மேம்பாட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளதை பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அ த னைத் தொ டர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம், பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தலைமையில், கலெக்டர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந் நி கழ் வு க ளில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் கலைவாணி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம் மாவட்டம் மஞ்சக்கொல்லை கிராமத்தில் விவசாயிகளுக்கு வர்த்தக தொடர்பு பயிற்சி
### கலெக்டர் ப.ஆகாஷ் துவக்கி வைத்தார்



**நாகப்பட்டினம்,ஜூலை.10-**
நாகப்பட்டினம் மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் முன்னோடி விவசாயிகள் வேளாண் தொழில் முனைவோர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான வர்த்தகத் தொடர்பு பணிமனை (ஐNவுநுசுகுயுஊநுறுழுசுமுளுர்ழுP) தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் நம் மாவட்டத்தில் காவிரி உபவடிநிலப்பகுதியில் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவங்கி 500-1000 விவசாயிகளை ஒருங்கிணைத்து வணிக நோக்கில் வெற்றிபெற வழிவகை செய்து தரப்படுகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த வர்த்தகத் தொடர்பு பயிற்சி நடைபெறுகிறது. இதன் முக்கிய நோக்கம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு கடன்வசதி மற்றும் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்தித் தருவதாகும். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் அதன் சகோதரத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிறைவுப் பகுதியான வணிகத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு இடர்பாடுகள் மற்றும் சரியான வருவாய் கிடைக்காததால், விவசாயிகளுக்கு நிலையான வருவாய் ஏற்படுத்தும் நோக்கத்துடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் மாநில அரசு இந்த திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்த நீர்வளம் மற்றும் நிலவளம் மேம்பாடு திட்டத்தின் கீழ் மண் வளத்தினை பாதுகாத்திட பசுந்தாள் உர பயிர்கள் பயிர் சுழற்சிமுறையை பின்பற்றி பயிர் சாகுபடி செய்தல் போன்ற தொழில் நுட்பங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இத்திட்டத்தில் வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, தோட் டக் க லைத் து றை, பொதுப் ப ணித் து றை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் மீன் வளத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தில் குறிப்பிட்ட பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இந்த குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தி நிறுவனங்களாக அமைக்கப்பட்டு செயல்படுத்தி வருகிறது. உழவர் பெருமக்கள் நீடித்த நிலையான வருவாயினை உற்பத்தி செய்து விளை பொருட்களுக்கு கிடைத்திட விவசாயிகளை தொழில் முனைவோராக ஆக்குவதற்காக அவர்களுக்கு இந்த பணிமனையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இரண்டு நாள் பயிற்சியில் வேளாண் விஞ்ஞானிகள், தொழில் முனைவோர்கள் சாதனை அடைந்துவரும் விவசாய உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வெளி சந்தையில் உள்ள தேவைகள் குறித்தும், அவற்றை வெளியிடங்களுக்கு சந்தைப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டு முறைகளையும், இப்பணியினை செயல்படுத்திட தேவையான நிதி ஆதாரங்களை பெறுவதற்கு வங்கிகளில் உள்ள திட்டங்கள் குறித்தும் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு நிதி பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள், முன்னோடி விவசாயிகளும், விவசாய உற்பத்தி நிறுவனங்களும் இந்த தகவலை பெற்று மென்மேலும் வளர்ச்சி அடையுமாறு கலெக்டர் தெரிவித்தார்.

அதனைதொடர்ந்து, விவசாய விளைபொருட்கள் மற்றும் மதிப்புகூட்டப்பட்டபனை பொருட்கள் கண்காட்சி அரங்கினை கலெக்டர் திறந்து வைத்து, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் வியாபார விரிவாக்க மானியத்தின் கீழ் நாகப்பட்டினம் காணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூ.30 இலட்சம் வியாபார விரிவாக்க மானிய தொகைக்கான காசோலை மற்றும் 60 பயனாளிகளுக்கு தலா ரூ.28,000- வீதம் ரூ.16,80,000- மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடன் தொகைக்கான காசோலையினை வழங்கினார். இவ்விழாவில் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) சோ.வெற்றிவேலன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகர், மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) விஸ்வந்த் கண்ணா, திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், விவசாய பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் வட்டம் ஆர்.1226 குரும்பலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட ஈச்சம்பட்டி மூலங்காடு கிராமத்தில் நகரும் நியாய விலைக் கடையின் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முதல் விற்பனையை துவக்கி வைத்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ம.ராஜ்குமார், பொது விநியோகத்திட்ட துணைப் பதிவாளர் ப.சிவக்குமார், வட்ட வழங்கல் அலுவலர் மு.ஆறுமுகம், கூட்டுறவு சார்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) கலந்து கொண்டனர்.

## வேதாரண்யம் அருகே நடுக்கடலில் ஆறுகாட்டுத்துறை மீனவர்களைத் தாக்கி இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியம்

**வேதாரண்யம்,ஜூலை.10-**
வேதாரண்யம் அருகே நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த ஆறுகாட்டுத்துறை மீனவர்களை தகர்கி ரூ இரண்டரை லட்சம் மதிப்புள்ள 300 கிலோ மீன்பிடி வலைகளை இலங்கை கடற்கொள்ளையர்கள் வெட்டி அபகரித்து கொண்டு மீனவர்களை விரட்டி அடித்த சம்பவம் மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது

ஆறுகாட்டுத்துறை கிராமத்தை சுகன்யா என்பவருக்கு சொந்தமான நாட்டு படகில் சந்திரமோகன், நாவுக்கரசன், சோழராஜன், ரஞ்சித் ஆகிய நான்கு மீனவர்கள் நேற்று முன்தினம் மதியம்; கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்

வேதாரண்யத்திற்கு கிழக்கே நடுக்கடலில் 18 கடல்மைல் தொலைவில் மீனவர்கள் வலை விரித்திருந்தனர் இவர்கள் இரவு 7 மணியளவில் மீன்பிடித்து கொண்டிருந்த போது அங்கு அதி நவீன என்ஜின் பொருத்தப்பட்ட இரு படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 6 பேர் ஆறுகாட்டுத்துறை மீனவர்கள் மீன்பிடிக்க விரித்திருந்த வலையில் 300 கிலோ எடையுள்ள மீன்பிடி வலைகளை வெட்டி அபகரித்து கொண்டு மீனவர்களை கல்லால் தாக்கி விரட்டி அடித்து விட்டு சென்று விட்டனர் வாழ்வாதாரமாக உள்ள ரூ இரண்டரை லட்சம் மதிப்புள்ள வலைகளை இலங்கை கடற்கொள்ளையர்களிடம் பறிகொடுத்த நிலையில் 4 மீனவர்களும் வெறுங்கையுடன் கரை திரும்பினர் இச்சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும காவல் நிலையத்தல் புகார் செய்யப்படன்டுள்ளது இதற்கிடையில் கார்த்திக, பொன்னுசாமி; ஆகியோருடைய இரு படகுகளில் மீன்பிடிக்க 9 மீனவர்களையும் மீன்பிடிக்க விடாமல் தடுத்து இலங்கை கடற்கொள்ளையர் விரட்டியத்த சம்பவம் மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

